DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE,CHEYYAR

CASE NO. SC. No. 203-2019

Prosecution witness PW - 11

Name .... Dr. Nandhini

Father's Name ....

Village ....

Taluk ....

Caste ....

Calling ....

Religion ....

Age ....

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of 15th day of July 2025.

முதல் விசாரணை

நான் தேனாம்பேட்டை டி.பி.எச்-ல் பணிபுரிகிறேன். 13.06.2018 அன்று நான் 24 மணிநேரம் பணியிலிருக்கும்போது வந்தவாசி அரசு மருத்துவமனையில் காந்தா, (வ 40) க/பெ. தவமணி 206, மேட்டுத்தெரு, தேத்துறை கிராமம், செய்யாறு தாலுக்கா என்பவரை வேலு என்கிற உறவினர் சிகிச்சைக்காக அழைத்துவந்திருந்தார். பின்னர் காந்தாவை பரிசோதித்தபோது அவர் தன்னை 11 தெரிந்த நபர்கள் ( 8 ஆண்கள், 3 பெண்கள்) தன்னை சுமார் இரவு 8.45 மணிக்கு தன் வீட்டு அருகில் கல், இரும்பு கம்பி மற்றும் கட்டையால் தாக்கியதாக சொன்னார். பரிசோதனையில் அவரது தலையின் வலதுபுறத்தில் வீக்கம் தென்பட்டது. மேலும் 3 X 2 செ.மீ அளவில் காயம் ஒன்று தென்பட்டது. வலது காலில் 2 X 1 X 1 ஒழுங்கற்ற கிழிந்த காயம் இருந்தது. அவரை பரிசோதித்தபோது அவர் அரை மயக்கத்தில் இருந்ததால் சி.டி ஸ்கேன்

தேவைக்காக செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டோம்.அங்கிருந்து அவர் ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனைக்கு எச்.ஆர். சி.டி. ஸ்கேனுக்காக மாற்றப்பட்டார். 03.08.2018 அன்று ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் எடுக்கப்பட்ட எச்.ஆர். சி.டி. ரிப்போர்டுடன் என்னை வந்து சந்தித்தார். அந்த ஸ்கேனில் தலையின் வலது புறத்தில் எலும்பு உடைந்ததாக மருத்துவ அறிக்கை கொடுக்கப்பட்டுள்ளது. எனவே முதல் காயம் கொடுங்காயம் என நான் சான்றளித்தேன். 2வது காயம் சொற்ப காயம் என்றும் சான்றளித்தேன். மேற்படி ஏ.ஆர் காப்பி **அ.த.சா.ஆ.**8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. காயச்சான்று **அ.த.சா.ஆ.**9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக என்னையும் ஆய்வாளர் விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

ஒருவர் ஓடிவந்து கீழே விழுந்தால் மேற்படி இரண்டு காயங்களும் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வராது. மேற்படி ஏ.ஆர் காப்பியில் அயன்ஸ்டிக் மார்க் என்று குறிப்பிடப்படவில்லை. இருசக்கர வாகனத்தில் விழுந்து விபத்து ஏற்பட்டால் மேற்படி காயம் ஏற்பட வாய்ப்புள்ளது. கொடுங்காயத்திற்கான எக்ஸ்ரே எதுவும் எடுக்கப்படவில்லை